மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.303/2017</u>

2026 ம் ஆண்டு பிப்ரவரி 04 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வரதராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>04.02.2026 பி.வா.சா.2 ஆஜர் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தாக்கல் செய்துள்ள எனது பள்ளி மாற்றுச் சான்றிதழில் கண்டுள்ள குறிப்புகள் எந்த ஆண்டு எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. நான் சொன்ன தகவலின் அடிப்படையில் எனது பள்ளி மாற்றுச் சான்றிதழில் கண்டுள்ள விவரங்கள் எழுதப்படவில்லை என்றால் என் அப்பா பள்ளியில் என்னை சேர்த்த போது சொன்ன விவரங்களை வைத்து எழுதப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பள்ளி மாற்று சான்றிதழில் காலம் எண் 3 ல் தாயாரின் பெயர் குறிப்பிட்ட சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.17 ஆவணமான எனது பள்ளி மாற்றுச் சான்றிதழில் மேலே இரண்டு முதல் ஏழு இனங்களுக்கு எதிரே பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்றும் எதிர்

காலத்தில் அவற்றில் மாற்றம் எதுவும் கேட்க மாட்டேன் என்றும் நான் உறுதி அளிக்கிறேன் என்று வாசகங்கள் கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உறுதிமொழியை பெற்றோர் அல்லது பாதுகாவலர் அளிக்க வேண்டும் என்றால் ஆமாம். அதில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் ஆமாம்.

3. நான் சென்று வாங்கியதால் அதில் பெற்றோர் பாதுகாவலர் கையொப்பம் இல்லை. பள்ளியில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் என் தகப்பனார் உறுதிமொழி கொடுத்து கையொப்பம் செய்து உள்ளாரா என்றால் அதில் வராது. பள்ளி பதிவேட்டில் என் தகப்பனார் கையொப்பம் உள்ளதா என்று நான் பார்த்தேனா என்றால் பழைய பதிவேட்டில் இருக்கலாம் தற்போது இல்லை. மாற்றுச் சான்றிதழுக்கு எப்போதும் ஒரே பதிவேடு தான் பராமரிக்கப்படும் என்றும் பழைய பதிவேடு என்றும், புதிய பதிவேடு என்றும் எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

4. பழனிச்சாமி என்பவர் பள்ளி மாற்று சான்றிதழில் கண்டுள்ள விவரங்களை சொல்லி என்னை பள்ளியில் சேர்த்து இருந்தால் பெற்றோர் அல்லது பாதுகாவலர் என்ற இடத்தில் உறுதிமொழியில் கையொப்பம் செய்திருப்பார் என்றும் அவர் பள்ளியில் சேர்க்காததால் தான் அந்த இடத்தில் கையொப்பம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தாயார் தான் என்னை விவரங்கள் சொல்லி பள்ளியில் சேர்த்தார் என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள எனது பள்ளி மாற்று சான்றிதழில் காலம் எண் 2 முதல் 7ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் என்

தகப்பனார் விவரங்கள் சொல்லி என்னை பள்ளியில் சேர்த்திருந்தால் உறுதிமொழியை ஏற்று கையொப்பம் செய்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பள்ளி மாற்றுச் சான்றிதழை மட்டும் வைத்து என் தகப்பனார் பெயர் பழனிச்சாமி என்று நான் எந்த உரிமையும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.8 குடும்ப அட்டை என் தாயார் உடையது அதில் கண்டுள்ள ராசுகுட்டி என்ற நபர் யார் என்றால் அது நான் தான் எனது பெயர் ராசுகுட்டி என்று நான் எனது எதிர்வளக்குரை மற்றும் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் விவரங்கள் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. விஜயா மற்றும் பழனிச்சாமிக்கு பிறந்த மகன் பெயர் ராசுகுட்டி என்றும் அது நான் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல நான் சொல்வது போல் நான் பழனிச்சாமியின் மகன் என்பது உண்மையாக இருந்தால் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.8 குடும்ப அட்டையில் ராசுகுட்டி என்ற பெயருக்கு பதிலாக எனது பெயர் தான் கண்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

7. ராசுகுட்டி என்ற நபரும் நானும் வேறு வேறு நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னை ஊருக்குள் ராசுகுட்டி என்று அழைப்பார்கள்அதனால் குடும்ப அட்டையில் அவ்வாறு குறிப்பிட்டு விட்டார்கள் என்னை ஊருக்குள் ராசுகுட்டி என்று அழைப்பதை பொறுத்து நான் ஏதேனும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பொருத்து நானே சாட்சியம் அளிக்கிறேன். நான் தான் ராசுகுட்டி என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. எனது வயதை குறித்து முன்னுக்கு பின் முரணாக செல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி மட்டும் தான் இறந்து போன பழனிச்சாமி என்பவரின் ஒரே மகன் என்றும் நான் பழனிச்சாமிக்கு மகன் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.04 18:13:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்